**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.05
https://ngmtamil.in/

# திருக்குறளில் சூழலியல்

**பி.அஜித்குமார்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி, தர்மபுரி-636 905.
பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது.
**முனைவர் இ.சுஜிதா,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி, தர்மபுரி-636 905.
பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது.

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். அக்கால மக்கள் இயற்கையைக் கடவுளாகக் கருதி வழிபட்டதோடு மட்டுமல்லாமல் இயற்கையின் சூழல்களையும் நன்கு அறிந்திருந்தனர். தனிமனிதனின் உறவு, குடும்பம், சமூகம் எனப் பல்வேறு நிலைகளில் காலந்தோறும் சங்கிலிதொடர்பு போல் தொடர்ந்து வருகின்றன. குறிப்பாகச் சூழலியல் பற்றிய விழுமியங்கள் மனிதனின் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும். சங்க மருவிய கால இலக்கியமான அற இலக்கியத்தில் சூழலியலைப் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்துவதை அறிய முடிகிறது. 'திருக்குறளில் சூழலியல்' என்னும் தலைப்பில் பறவைகள், விலங்குகள், தாவரங்கள், காடுகள், நிர்நிலைகள், உழவு, உணவுப்பயிர்கள், பாரம்பரிய விதைகள் முதலியவைற்றைக்கொண்டு சூழ்நிலையிலோடு இயற்கையின் வாழ்வியலை முழுவதும் திருக்குறளின் வழியே ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சூழலியல்**

சூழலியல் என்பது உயிர் வாழ்க்கையில் பரவல் பற்றியும், உயிரினங்களுக்கும் அவற்றின் இயற்கைச் சூழலுக்கும் இடையிலான இடைவினைகள் பற்றியும் அறிவியல் அடிப்படையில் அமைவதாகும். சூழல் என்பது தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றை அனைத்து உயிரினங்களை உள்ளடக்கியதாகும்.

"சூழலில் என்ற சொல் ஓய்கோஸ், லோகியா எனும் கிரேக்கமொழிச் சொற்களிலிருந்து பெற்றப்பட்டது" என்கிறார் சர்மா.சூழலியல் என்பது உயிரினம் வாழும் இடத்தை நிர்ணயிக்கக் கூடியதாகும்.

பண்டைத் தமிழர்களின் சூழலியல் பற்றி அறிந்து கொள்ள தொல்காப்பியம் அடிப்படையானது. தொல்காப்பியம் குறிப்பிடும் முதல், கரு, உரி என்ற முப்பொருள்களைப் பிரதிபலிப்பவையாக அமைகின்றன. அதாவது, சூழலியல் ஐம்பெரும்பூதங்களால் உருவானவை என்பது நம்மிடையே ஆழமாக வேரூணடியுள்ளது. அத்தகைய சூழலியல் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என்ற காரணிகள் முக்கியப் பங்காற்றுகின்றன. இவ்வியற்கைக் காரணிகள் மனிதச் செயற்பாட்டால்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

பல்வேறு மாறுதல்களை அடைகின்றன. தொல்காப்பியத்தில் உலகம் எவற்றால் உருவானது என்பதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. அவை,

"நிலம் தீ நீர் வளி விசும் பொரு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்
திரிவுஇல் சொல்லோடு தழாஅல் வேண்டும்" (தொல்.மரபி.நூ.635)

என்ற நூற்பா விளக்குகின்றன.

இந்நூற்பாவில், ஐம்பெரும் பூதங்கள் எனப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆகும் என்பதை அறியமுடிகிறது. ஆதலால், இப்பொருள்களைத் திணை, பால் வழுவுதல் இன்றித் திரிவு படாத சொல்லோடு பொருந்திக் கூறுதல் வேண்டும் என்கிறார். இக்கருத்தை ஒத்திசையாகப் பெருவயின் முள்ளியாரும் ஐம்பூதங்களின் சிறப்பினைக் குறிப்பிடுகையில்,

"ஐம்பூதம் பார்ப்பார், பசுதிங்கள், ஞாயிறு
தம்பூதம் எண்ணாது இகழ்வனேல் தம்மெய்க்கண்
ஐம்பூதம் அன்றே கெடும்" (ஆசாரக்.பா.15)

என்கிறார். ஐம்பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, வான் ஆகியவற்றையும் அந்தணர்களையும், பசுக்களையும், திங்களையும், சூரியனையும் தம் உடம்பு போல் எண்ணாது இகழ்வாராயின், அவனது உடலில் உள்ள ஐந்து பூதங்களையுடைய தெய்வங்கள் அன்றே அகன்று விடும் என்கிறார். உயிரினங்களின் சுழற்சிக்கு இவை அடித்தளமாகக் கொண்டு இவ்வுலகம் இயங்குகிறது என்பதை அறிந்த புலவர்கள் இவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகின்றனர்.

**நிலமும் மழையும்**

மக்கள்தொகை பெருக்கத்தின் காரணமாகவும், நாகரிக வளர்ச்சியின் காரணமாகவும் இன்றைய உலகம் விரிவடைந்து செல்கின்றது. இன்று காடுகளை அழித்துப் பெரும் அழிவை சந்திக்க நேரிடும் என்பதை உணர்ந்த நம் புலவர்கள் நிலத்தை இரவில் வெட்ட வேண்டாம் என்பதை "நிலம் இராகீறார்" (ஆசாரக்.பா.13) என்ற அடிகள் மூலம் உணர்த்துகிறார்.

வேளாண்மைத் தொழிலுக்கு நிலம் மிக முக்கிய அங்கமாக வகுக்கிறது. அக்கால வேளாண்மைச் சமுதாயத்தில் மழையின் சிறப்பைப் பாடாத புலவர்கள் இல்லையென்றே கூறிவிடலாம். விவசாயத்திற்கு மழை எவ்வளவு அவசியம் என்பதைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. மனித இனம் தாம் செய்யும் செயல்களால் மழை பெய்வது குறையும் என்பதை,

"கொள் பொருள் வெஃகிக் குடி அலைக்கும் வேந்தனும்
------- ------- ------- -------- -------- --------- --------
வல்லே மழை அருக்கும் கோள்"( திரிக்.பா.50)

என்னும் அடிகளில் தான் கொள்ள வேண்டிய வரிப் பொருளை விரும்பிக் குடிமக்களை வருத்தும் மன்னவனும், உறவினருடன் உண்மைப் பொருளைச் சொல்லாது பொய் சொல்கின்ற மாந்தரும், வீட்டில் இருந்து வரம்பு மீறி நடந்து கொள்ளும் மனைவியும் இம்மூவராலும் மழை பெய்வது குறையும் என்பதைக் குறிப்பிடுகிறார். இது மன்னனையும், மாந்தர்களையும் நல்வழிப்படுத்தும் விதமாகப் பார்க்கப்படுகிறது.

நிலவளத்தோடு நீர்வளமும் தேவை. நாம் பெரும்பாலும் வானம் மற்றும் பருவமழையையும் எதிர்பார்த்து வாழ்கிறோம். சாகாவரம் பெற்றவராக உயிரினங்களை வாழ்விக்கும் அமிர்தம் போல்,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மக்கள் சமுதாயத்தை வாழையடி வாழையாக வாழ்விப்பது மழையாகும். மழை பொழிவது பொய்த்தால் புல்லும் முளைக்காது. கொடும் பசியே நிலை கொண்டு மக்களை வருத்தும் என்கிறார் வள்ளுவர்.

நீர், நில வளங்கள் என்னும் இயற்கையைப் பொருளுக்குத் தாய் என்று உரைத்தால், மனித உழைப்பே அதன் தந்தை என்று குறிப்பிடலாம். பாடுபட்டுப் பொருளை அடைந்து இன்பமாக வாழ வேண்டும் என்பதே குறள்நெறியாகும்.

"கொல்லை இரும்புனத்துக் குற்றி அடைந்தபுல்" (நாலடி.பா.178)

என்று நாலடியார் கூறுகிறது. அதாவது, புன்செய் நிலத்தினும் பெரிய நிலத்தினும் மரக்கட்டையைத் தாங்கி முளைத்திருக்கும் புல்லானது உழவரின் கலப்பைக்குச் சிறிதும் அசையாது. நில வளத்தினால் செழித்து வரும் நெற்பயிர்போல், மக்கள் தாங்கள் சேரும் கூட்டத்தின் சிறப்பால் உயர்வர் என்கிறது நாலடி. மழை இல்லையேல் உலக மக்களுக்கு நல்வாழ்வு இல்லை. மழையின் அவசியத்தை நான்மணிக்கடிகை வலியுறுத்துகிறது. மேலும்,

"மனத்தால் மறுஇலரேனும் தாம் சேர்ந்த
இனத்தால் இகழப்படுபவர் - புனத்து
வேறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனம் தீப்பட்டக்கால்" (நாலடி.பா.180)

என்பது காடு தீப்பற்றி எரியும்போது மணம் வீசும் சந்தனமரமும் வேங்கைமரமும் வெந்து போகும். அதுபோல் மனத்தின் ஒரு குற்றமும் இல்லாத நல்லவராயினும் அவர்கள் சேர்ந்த தீய இனத்தின் காரணமாக இகழப்படுவார்.

**நீர் சேமித்தல்**

உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு நீரானது அவசியம். அக்காலத்தில் நீரினை அணைகள் கட்டியும், ஏரிகளினாலும் சேமிக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தப்படுகிறது.

'ஏரி சிறிதாயின் நீரூரும்' என்பதினால் ஏரியினை ஆழப்படுத்த வேண்டும் என்ற கருத்து வெளிப்படுத்துகின்றது. 'நீரான்வீ யெற்தும் விளைநிலம் நீர்வழங்கும்' தண்ணீர் பாய்ச்சலால் விளைநிலம் செழிப்படையும். குளங்களும் நீர்பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனை 'வளமில் குளத்தின்கீழ் நெற்சாம்' நீர் வளமற்ற ஏரியின் கீழுள்ள் நெறிபயிர்கள் வாடிவிடும். ஆகவே, நெற்பயிருக்கு நீர் இன்றியமையாமையை அற இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

போதுமான அளவு மழை பெய்யாமல் குறைந்த அளவே பெய்யுமானால் உழவர்கள் ஏர்பிடித்து உழமாட்டார்கள். உழவுத்தொழில் நிகழாது. உணவு உற்பத்தி நின்று போகும். பஞ்சம் வந்து சேரும் என்பதை,

"நீர்இன்று அமையாது உலகுஎனின், யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு" (குறள்.20)

என்கிறார் வள்ளுவர். உலகம் நீரை நம்பியே இயங்குகிறது. மழையின்றித் தொடர்ந்து பஞ்சம் நிலவுமானால் மக்கள் ஒழுக்கத்திற்குப் பஞ்சம் வந்துவிடும். உழவுத்தொழிலுக்கு நீர் முக்கியம் என்பதைக் காட்டுகிறது.

'பாடலொடு ஆடல் பயின்றுஉயர் செல்வனாய்' என்னும் அடிகளில் பருகுவதற்குரிய நீர்நிலைகள் குளம், கிணறு வழிகளில் பலரும் தங்குதற்குரிய இலைக்குடிகள், தண்ணீர் பந்தல்கள், மண்டபங்கள் ஆகியவற்றை வகை வகையாக அமைத்தவன் மிகுந்த செல்வத்தோடு இசையோடு பொருந்தி பாடலையும், ஆடலையும் பலமுறை கேட்டும் கண்டு அனுபவித்து உள்ளன்புடைய மனைவியோடு சிறப்பாக வாழ்வர் எனக் குறிப்பிடுகிறது. மேலும்,

"குளம் தொட்டு காவு பதிந்து வழிசீத்து,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

உளம் தொட்டு, உழுவயல் ஆக்கி, வளம் தொட்டுப்
பாகுபடும் கிணற்றொடு என்று இவை பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கும் இனிது" (சிறுபாணாற்.பா.வரி.64)

என்ற பாடலில், குளம் வெட்டுதல், அதனைச் சுற்றி மரக்கிளைகளை வெட்டி நடுதல், மக்கள் நடக்கும் வழியைச் செதுக்கிச் சீர்செய்தல், தரிசு நிலத்தின் உள்ளிடத்தைச் செப்பம் செய்து வயல் ஆக்குதல், இவற்றுடன் வளமாக நீர் வரும்படி கிணறு தோண்டிச் சுற்றிலும் சுவர் எழுப்பி உண்டாக்குதல் என இவ்வைந்தினையும் செய்தவன் சொர்க்கலோகத்தற்கு இனதாகச் செல்வான் என்கிறது. எதிர்காலத்தை எண்ணி அக்காலப் புலவர்கள் பாடல்கள் இயற்றப்பட்டதாகத் தெரிகின்றன. "காவோடு அறக் குறளம் தொட்டால், மிக இனிதே" (இனியவை நாற்.பா.23) என்று பாடல் உணர்த்துகிறது. சோலைகளை வைத்து வளர்ப்பது அறத்திற்காகக் குளத்தைத் தோண்டுவது இனிது. மழை வளம் பெய்யாது பொய்க்குமானால் உலகத்துக்குத் துன்பம் உண்டாக்கும் என்பதை,

"பெயற்பால் மழை பெய்யாக்கண்ணும், உலகம்
செயற்பால செய்யாவிடினும்-கயல்புலால்
புன்னை கடியும் பொருகடல் தண் சேர்ப்ப
என்னை உலகு உய்யும் ஆறு" (நாலடி.பா.97)

எனும் பாடல், மீன்களின் புலால் நாற்றத்தைப் போக்கும் புன்னை மலர்களையுடைய அலைமோதும் குளிர்ந்த கடற்கரைத் தலைவனே! பருவமழை தவறியபோது உலகில் உள்ள உயர்ந்தோர் செய்யத்தக்க உதவிகளைப் பிறருக்குச் செய்யாவிட்டால் உலகத்து உயிர்கள் எவ்வாறு பிழைக்கும்? என்று மழையின் அவசியத்தை உணர்த்துகிறது.

"உறைப்பு அருங்காலத்தும், ஊற்று நீர்க்கேணி"(நாலடி.பா.184)

மழையில்லாத கோடைகாலத்திலும் நீர் சுரக்கும் கிணறு தன்னிடம் உள்ள தண்ணீரைப் பிறர் இறைத்து உண்ணக் கொடுத்து ஓர் ஊரைக் காப்பாற்றும் என்கிறது.

"உறுபுனல் தந்து,உலகு ஊட்டி
அறும் இடத்தும்" (நாலடி.பா.185)

மழைக்காலத்தில் மிக்க நீரைக்கொடுத்து உலக மக்களை உண்பித்த ஆறு நீரற்ற போதும் தோண்டப்பெற்ற ஊற்றுக் குழியில் நீர்சுரந்து உதவி செய்யும். ஆறின் உதவும் மனப்பான்மையைக் காட்டுகிறது.

**பறவை-விலங்கினம்**

இயற்கைச் சூழலியலில் பறவைகள், விலங்கினங்கள் போன்ற உயிரினங்களின் பங்கு மிகவும் முக்கியமானது. தொல்காப்பியரும் ஓரறிவு முதல் ஆறறிவு வரை எவை எந்த அறிவினைப் பெற்றுள்ளன என வகைப்படுத்தியுள்ளார். இந்தப் பிரபஞ்சம் இவர்களால் இயங்குகின்றன. ஒவ்வொரு உயிரினங்களும் தனித்தனி திறமைகளில் சிறப்புப்பெற்றவை. அதை வெளிப்படுத்தும் விதமாக,

"வான்குரீஇக் கூடுஅரக்கு, வால்உலண்டு நூல் புழுக்கோல்
தேன்புரிந்து, யார்க்கும் செயல்ஆகா – நாம்புரீஇ
வல்லவர் வாய்ப்பன என்னார், ஓரோஒருவர்க்கு
ஒல்காது ஓரொன்று படும்" (சிறுபாணாற்.பா.[25])

என்னும் வரிகளில், தூக்கணாங்குருவியால் கட்டப்பெற்றக் கூடும், பெரிய எறும்புகளால் செய்யப்பெற்ற அரக்கும், தூய உலண்டு என்னும் புழுக்களால் நூற்கப்பெற்ற நூலும், கோல் புழுவால் செய்யப்பெற்ற கோற்கூடும் ஆகிய நான்கும், எவராலும் செய்யமுடியாதனவாம். ஓவ்வொருவருக்கும்

ஒவ்வோர் ஆற்றல் உண்டு. எல்லாவற்றையும் எல்லோராலும் செய்ய முடியாது என்பதை அறியப்படுகிறது.

இதே கருத்தினைப் பெருவாயின் முள்ளியாரும், தம் செயலைத் தளராமல் செய்பவர் பெறும் பயனாக,

"நந்துஎறும்பு தூக்கணம்புள், காக்கை என்று இவை போல்"(ஆசாரக்.பா.96)

என்ற பாடலில் கூறுகிறார். ஆக்கமுடைய எறும்பு, ஊக்கமுடைய தூக்கணாகுருவி, கூடியுண்ணும் காக்கை போன்றவற்றின்; செய்கை போல நல்லவனாகிய மனிதர்கள் தம் செயல்களைச் சோர்வடையாமல் கைக்கொண்டு தம் கருமத்தை எல்ல இடங்களிலும் சிறப்பாக செய்ய வேண்டும் என்று அறிவுத்தப்படுகிறது.

"மாரி நாள் கூவும் குயிலின் குரல் இன்னா" (இன்னா நாற்.பா.20)

என்ற பாடல் வரி உணர்த்துகிறது.

**உயிரின வகைத் தோற்றம்**

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்படை மக்கட் பெறின்"(குறள்.62)

என்னும் வள்ளவரின் வார்த்தையை உற்றுநோக்குங்கால் டார்வினின் படைப்புச் சித்தாந்தம் நம்மிடையே நடப்படுகிறது. உயிரிகளின் வகைதொகைகளை ஒரு பழம்பெரும் பாடலின் வழியே காணலாம்.

"பிறப்பு ஏழவன
நீர்ப்பறவை நாற்கோலாம் ஒன்பது மானிடம்
பந்தமாந் தேவர் பதினால் அயன் படைத்த
அந்தமில் சீர்ந் தாவரநா லைந்து"

என்னும் பாடலின் வழியே, ஊர்வன பதினோர் இலட்சம், மனிதப்பிறவி ஒன்பது இலட்சம், நீர் வாழ் சாதியும், பறவைகளும், விலங்குகளும் தனித்தனியாகப் பத்து இலட்சம், தேவர்கள் பதினாலு இலட்சம், பிரம்மனால் படைக்கப்பட்ட அசையாப் பொருடகள் இருபது இலட்சம் என இலட்சக் கணக்கில் தொகை, வகை விரியக் காண்கிறோம். இருப்பினும், ஏழு பிறப்பிலும் தீயவை தீண்டா நன்மக்களை பெறுவதே சூழலியலின் தலையாய கடமை என வள்ளுவம் விளம்புகிறது.

**வான்மழைச் சிறப்பு**

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றுஆங்கே
பசும்புல் தலைகாண்ப அரிது" (குறள்.16)

மழைநீர் இயற்கை அன்னை நமக்கு வழங்கிய தாய்ப்பால் எனில் அது மிகையாகாது. மழை எனும் அமிழ்தம் பூமியை தொட்டாலன்றி புல் முதலான தாவர வர்க்கங்கள் துளிர்க்காது என்பது நேர்ப்பொருளாக இருப்பினும் இதனைச் சற்று விரித்து நோக்குங்கால், தொடக்க காலம் முதலே பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் போன்ற மனித உணவுத் தேவைகளைத் தருவன கால்நடைகளே. அவைகளின் முக்கிய உணவாக விளங்குவது புசும்புல்லே. பண்டைய ஐந்திணைப் பாகுபாட்டில் தமிழர் வாழ்வின் ஆதாரமாக ஆநிரைகளும் ஆயர்களுமே தனித்த இடம் பெற்றிருந்தனர். இக்குறளின் சூழல் நுட்பத்தை ஈண்டு நோக்கின் ஓர் அறிவு இனமான புல் முதற்கொண்டு ஆறறிவு வரை உள்ள அனைத்து உயிர்களுக்கும் மழையே பொதுவாகும் என்ற சூழல் சிறப்பை எடுத்தியம்புகிறது வள்ளுவம்.

இதனை மனிதத் தன்மையோடு ஒப்பிட்டும் மனிதத் தன்மை இல்லாதவன் ஓரறிவு படைத்த மரத்திற்கு ஒப்பானவன் என்றும் வள்ளுவம் கூறுகிறது.

"அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்

மக்கள் பண்பு இல்லாதவர்"(குறள்.997) என்ற குறள் வழி அறியலாகிறது.

நீரின்றி அமையாது உலகு

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்

பேரறி வாளன் திரு"(குறள்.215)

ஊர் உண்ணும் நீர் என்பதன் சுருக்கமே 'ஊருணி'யாகும். அக்காலத்தில் ஊர்கள்தோறும் ஊருணிகள் இருந்தன. மக்களும், விலங்குகளும் நீரத்தேவையை அந்த ஊருணிகளே தீர்த்து வைத்தன. ஊர்தோறும் ஊருணிகள் இருக்க வேண்டும் என்பதே நீர் மேலாண்மையின் அடிக்கருத்தாக வள்ளுவத்தில் பதியப்பட்டுள்ளது. இன்று உறிஞ்சு குழாய்களின் வழியே நீர் வழித்தெடுக்கப்படுவதால் நிலத்தடி நீர்மட்டம் நிர்க்கதியாய் கிடக்கிறது.

**குளம்**

"ஆகாது அளவிட்டி தாயினும் கேடில்லை

போகாது அகலாக் கடை"(குறள்.748)

ஒரு குளத்திற்கு வாய்க்கால் வழியாக நீர் வந்து சேர்கிறது. மற்றொரு வாய்க்கால் வழியே நீர் வெளியேறுகிறது. குளத்தில் நீர் நிறைந்து இருக்க வேண்டும் என்பது பொதுவிதியாகக் கொண்டால், நீர் வரும் வாய்க்கால் அகன்றும், வெளியேறும் வாய்க்கால் குறுகியும் இருக்க வேண்டும். அதனையே வள்ளுவம் அழகாக எடுத்தியம்புகிறது. இன்றைய சூழலில் குளம் என்னும் நீர்நிலை குறைவில்லாமல் வீடுகளாக மாறியபின் நீர் வரும் வழியும், நீர் வெளியேறும் வழியும் வழியடைத்ததால் மக்கள் வழியின்றி வெள்ளத் தேக்கத்தில் வேதனையுடன் வாழ்கின்றனர். செல்வம் வரும் வழி பெரிதோயினும், செலவு செய்யும் வழி சிறியதாகவும் அமைய செல்வம் பெருகும் என்று வள்ளுவம் வழிமொழிகிறது.

**கடல்**

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்; தடிந்தெழிலி

தானல்கா தாகி விடும்"(குறள்.17)

மூன்று சொற்களுக்குள் உலகை அடக்கி ஆளும் வள்ளுவத்;தின் திறத்தில் நம்மில் வியப்புக்குறி மேலிடுகிறது. ஆசான் மழையை பேரியல் நோக்கிலும், நுண்ணியல் நோக்கிலும் கண்ணுற்று விளம்புகிறார். மழை பொய்க்குமாயின் ஆழ்கடல்கூட தன் பெருமையை இழந்து வீடும். ஒழுக்கமும் உலகில் அமையாது என்;பதை மேற்கூறிய குறளின் வழியே எடுத்தியம்புகிறது வள்ளுவம்.

உலகின் மொத்த நீர்பரப்பு 100 விழுக்காடு எனில், அதில் மக்கள் பயன்படுத்தும் நன்னீர் 3 விழுக்காடு ஆகும். அதிலும் பனிமலையிலும், துருவங்களிலும் 2 விழுக்காடு நீர் உறைய, எஞ்சிய 1 விழுக்காடு நீரையே மக்கள் பயன்படுத்துகின்றனர். அப்படி எனில் 97 விழுக்காடு நீர் கடலில் உப்பு நீராகவே உள்ளது. இந்த உப்பு நீரே ஆவியாகி மழை மேகங்களாக திரண்டு மழையாகப் பொழிந்து உலக உயிர்களை வாழ வைக்கிறது. அறிவியல் சார்ந்த வானியல் சார்ந்த சூழலியல் பொருண்மைக்கு வள்ளுவமே சாட்சி என்பதில் இருமாப்பு கொள்கிறது மனம்.

**பிரபஞ்சத் தோற்றம்**

இப்பிரஞ்சம் எப்படி உருவானது? இதற்கு மதங்கள் சொல்லும் பதில் கடவுளால் உருவாக்கப்பட்டது என்பதாகும். அறிவியல் சொல்லும் பதில் இதனின்று உருவாக்கப்பட்டு. பல கோடி ஆண்டுகளுக்கு முன் இந்த பூமி வெறும் தூசு மண்டலமே. இது இடைவிடாத வேகத்தில் சுழன்று சுழன்று மோதியும் ஈர்த்தும் கோள்களும், நட்சத்திரங்களும் உருவாயின. சூரியன் ஒரு வெப்பக்கோள், சூரியனிலிருந்து பிரிந்து வீழ்ந்த சிறு துண்டே பூமி. இது நிலம், காற்று, நீர், வானம் இவற்றின் ஐம்பெரும் சக்தியினால், அதாவது பஞ்ச பூதங்களால் ஆனது.

மேல்பகுதி குளிர்ந்த பூமி பல கண்டங்களாக உருமாறின. பிறகு சிறு உயிரணுக்கள், பாசிகள், காளான்கள், பூச்சிகள், ஊர்வன, பறப்பன, நடப்பன என பற்பல உயிரினங்கள் தோன்றின. பின் பரிணாம வளர்ச்சியாக குரங்கும் மனிதனும் தோன்றின. இவ்வாறு ஐநூறு கோடி ஆண்டுகள் கடந்து வந்தது நம் பூமி. இதனை,

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு” (குறள்.1)

என்ற குறளின் மூலம் ஆதி என்பது ஆரம்ப நிலை எனப்பொருள்படும். கொண்டும் பகவன் என்பதை பிரித்தால் பகுத்தல் எனப் பொருள் கொண்டும். உலகு என்பது நாம் வாழும் உலகாகவும், முதற்றே என்பதில் 4-வரும் ஏகாரம் பூமி கோளாக உருவாக எத்தனை கோடி ஆண்டுகள் ஆயின என்பதையும் நமக்கு விளக்குகிறது.

ஆதி என்பது ஆரம்ப உயிர். அதாவது ஒரு செல் உயிர் அது பகுக்கப்பட்டு உயிர் பரிணமிக்கிறது. அதிலிருந்து நிர் வாழ்வன, நில வாழ்வன, வளர்வன, பறப்பன, பாலூட்டிகள் என உலக உயிர்கள் பரிணமிக்கின்றன என்பதைப் பாகுபடுத்தி சூழல் அமைவை எடுத்தியம்புகிறது வள்ளுவம்.

தாவரவியல் தர்க்கம்

“உலகம் தழ்கிய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு” (குறள்.425)

எனும் குறளின் வழியே, தாவரவியலில் பூக்கும் இனம், பூங்கா இனம் என இருவகை உண்டு. பூக்கும் இனத்தில் கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என நான்கு வகைகள் உள்ளன. இதில் நீர்ப்பூ மட்டும் ஒருவேளை மலர்வதும், ஒருவேளை குவிவதுமாக நிலை மாறும். மற்றவை ஒருமுறை மலர்வதும், ஒருமுறை மட்டும் குவிவதுமான நிலையில் இருக்கும் என சூழலை நம்மால் வள்ளுவத்தின் மூலம் அறிய முடிகிறது.

**மரத்தின் வகைகள்**

பழுமரம், மருந்து மரம், முள்மரம் எனத் திருவள்ளுவர் மரங்களின் வகைகளை விவரித்துள்ளார். காமத்துப்பாலில் மரத்தின் உயிர்ப்பை உணர்த்திய நுட்பம் அறியத்தக்கது.

“கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகோடு ஏறும்என் நெஞ்சு” (குறள்.1264)

‘நம் கண்ணுக்கு தெரியாமல் சிறிது சிறிதாகக் கிளைத்துப் படர்ந்து வளர்வது மரத்தின் உயிரியல்பு. அதைப்போல் தலைவியின் நெஞ்சமும், ஆவல் கிளைவிட்டு உடலெங்கும் படர்ந்து உயிர்ப்பித்தது’ என மரத்தின் இயல்பான உயிர்க்கும், தொழிலை தலைவியின் ஆவலுக்கு உவமை காட்டிய தொழில் நுட்பமும், நயமும் அறிந்து இன்புறத்தக்கதாகக் காட்டுகிறது வள்ளுவம்.

**பறவைகள்**

புள்-பறவை(338), காக்கை(481),(521), கூகை(481), கொக்கு(490), மயில்(1081), அன்னம் முதலிய பறவைகளின் சூழல் அமைதியை மேற்கண்ட திருக்குறள்கள் வழியே அறியலாகிறது.

“பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது” (குறள்.481)

சுகையை பகலிலே வென்றுவிடும் காக்கை. அதைப்போல பகைவரை காலம் அறிந்து வினைதெரிந்து வெல்ல வேண்டும். மெலியவராயினும் காலம் வாய்ப்பின் வலியவரையும் வென்று விடுவர் என்பதை இப்பறவைகளின் இயல்பால் உணர்த்துகிறது வள்ளுவம்.

“ஆலமர் சினையில் பலிபெரும் காகம் அரும்பகலழிந்த

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

கூகையினால் சாலவும் இடருற்று அலமரக்கண்டு" (பாரதம்.பா.214)

என்று பாரதமும் இரவில் கூகை காக்கைகளை வென்றதாகக் குறிப்பிடுகிறது.

**விலங்குகள்**

ஆ, பசு(560), எலி(763), ஏறு(59), ஆண்சிங்கம்(381), களிறு(500), பொருதகர்(486), நரி(500), பகடு(624), பிணை(1085), புலி(273,559), பெற்றம்(273), மா(819), யானை(599), முயல்(772), விலங்கு(410) எனும் இக்குறட்களின் மூலம் விலங்கின அமைவு, இட இயல்பு, உயிர்க்குணம், சூழல் அமைவு ஆகியவற்றை நேரிடையாகவும் உவமையாககுவும் எடுத்தாளப்பெற்றுள்ளது.

"ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்

தாக்குள்குப் பேரும் தகைத்து" (குறள்.486)

எனும் குறளில் ஆடு பின்வாங்குவது ஓடி ஒளிவதகற்கல்ல, மேலும் தன்னை வலுவாக்குவதற்கே. துணை வலிமை, படை வலிமை முதலியவை உடையராயினும் காலம் வரும்வரை பகைவர்மேல் செல்லாது ஒடுங்கி இருப்பது சாலச்சிறந்தது என காலச்சுசூலமைவை வள்ளுவம் நமக்கு உணர்ாத்திய நுட்பம் வியப்பைத் தருகிறது.

"புகழ்புரிந்த இல்லோர்க்கு இல்லை இகழ்வார்முன்

ஏறுபோல பீடு நடை" (குறள்.59)

விலங்கினங்களுள் அரிமா நடை மிடுக்கானது. மக்களுள் அம்மிடுக்கு நடை யாருக்கு வரும் என்பதற்கு இக்குறளைச் சாட்சியாக காட்டுகிறது வள்ளுவம்.

பதவி, படிப்பு, பணம், கல்வி, வீரம் முதலிய பீடு நடைக்கு ஏதுக்களாகும். அவற்றையெல்லாம் விட, நல்லா இல்லாளால் உள்ளத்தில் உறுதியும் புறத்தே அரிமா போன்ற பீடு நடையும் கிடைக்கும். அதுவே உயர்வானது என்ற இல்லற மாட்சியை அழகாக உணர்த்துகிறது வள்ளுவம்.

வள்ளுவம் காட்டும் வகைதொகைகளில் இயற்கைச் சூழலும் அதனைச் சார்ந்து நிலவும் மக்களின் வாழக்கைச் சூழலும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து நடக்கிறது. மரத்தையும், மனிதனையும், மலரையும், பண்புகளையும், நீரையும், நாட்டையும், நிலத்தையும், மலையையும் சூழல் அமைவில் பொருந்திய பாங்கில் வள்ளுவத்தின் பரிணாமம், பரிணாமத்திற்குப் பாதையையும் வகுக்கிறது.

'குன்றேறி யனைப்போர்' என்பதில் குறிஞ்சிநில மக்களையும்,

'முயலெய்த அன்பினில்' என்பதில் முல்லைநில மக்களையும்,

'ஏரின் உழவர்' என்பதில மருதநில மக்களையும்,

'கடலோடும் நாவாய்' என்;பதில் நெய்;தல்நில மக்களையும்,

அவர்களது வாழ்க்கைச் சூழல்களையும், தொழில் நிலைகளையும், உயிர்ச்சூழல் அமைதிகளாக பாகுபடுத்தியுள்ளது வள்ளுவம்.

**மணற்கேணி**

மணற்கேணி என்பது அருமையான சொல்லாடல். மணலில் தோண்டிய நீர்க்கிடங்கில், தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். இக்குறட்பாவில் இரண்டு நுட்பமான செய்திகள் உள்ளன. ஒன்று தேவைக்கேற்ப தண்ணீரைச் செலவழி. முற்றொன்று தேடல் என்னும் சூழ்நிலையின் வரும் கல்வி என்பதையும் மானிட சமூகத்திற்கு எல்லைத்தாண்டிய சூழலை உருவாக்கி தருகிறது வள்ளுவம்.

**முடிவுரை**

திருக்குறள் தமிழ்க்கொடை மற்றுமன்று. அதுவே தமிழனின் தொல்வாழ்க்கைக்கு சான்றும் கொடையும் ஆகும். அகமும் புறமும் தமிழரின் வாழ்வியல் அகமாகும். இன்பத்தில் அறமும் இயல்வது இயற்கை என்றானது. வள்ளுவன் பார்வை பன்முகத்தன்மை கொண்டது. அவனது சூழலியல் பார்வை என்பது எழில் நிறைந்தது. இன்று உலகம் உரத்து பேசும் உயிர்ச்சூழல் அமைவை ஈராயிரம்

ஆண்டுகளுக்கு முன்பே குறளில் அமைத்துப் பாடியவன் வள்ளுவன். முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும் என்ற பொருள் பொதிந்த சொற்றொடரின் மிகப்பெரும் சான்று வள்ளும். ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று முழங்கிய நம் தமிழ் வள்ளுவத்தின் வழி நின்று இயற்கையோடியைந்த வாழ்வை மேற்கொள்வோம். வள்ளுவம் வழி நிற்போம். வாழ்வியலைக் காப்போம்.

**பார்வை நூல்கள்**

[1]. இராமகிருசுணன்.இரா, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்(மூலமும் உரையும்), தென்றல் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை, 1999

[2]. துரைசாமி, செ.வே, சங்க இலக்கயம் (தெளிவுரை) , மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 2000

[3]. பெருந்தேவனார், பாரதம்(தெளிவுரை), சரஸ்வதி மஹால நூலகம், தஞ்சாவூர்

[4]. மருதநாயம், ப., திருக்குறள் மூலமும் ஆய்வுரையும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், 2024

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)